மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: நிதிநிலை அறிக்கை மீது விவாதம் நடைபெறும் போது உறுப்பினர் அவர்கள் இவ்விதக் கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம்.

திரு. சா. கணேசன்: இந்த அறிக்கையில் 'Diet charges' என்று போட்டிருக்கிறது. அது நோயாளிகள் ஆஸ்பத்திரிக்குக் கட்டுகிற கட்டணமா? உணவுக்காக அரசாங்கம் செய்கிற செலவுத் தொகையா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: உணவுக்காக மாத்திரம் தரப்படுகிற கட்டணம்.

Private practice by Government Doctors

* 69 Q.—THIRU N.R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to ban private practice by Doctors serving in Government Hospitals; and

(b) if so, the stage at which the proposal stands?

அரசாங்க மருத்துவர்கள் தனியாக தொழில் நடத்தல்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசாங்க மருத்துவ மனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் தனியாக தொழில் நடத்துவதை தடை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆமெனில், அச்செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்திலே ஆனரரி சர்ஜனாக வேலை பார்க்கிறவர்கள் அந்தச் சலுகையைப் பயன்படுத்தி வெளியிலே தங்களுடைய தொழிலில் அதிக வருமானம் சம்பாதிக்கும் நிலையில் இருக்கிறார்கள். அவர்களை ஆனரரி சர்ஜனாக நியமிப்பது பற்றி பத்து வருஷமாக இந்த அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. எஸ்டிமேட் கமிட்டியில் இதைப்பற்றி அனுப்பிய ரிபோர்டில் அதைக் கூறியிருக்கிறோம். ஆனால் இன்னும் அரசாங்கத்தில் வேலை செய்யும் வைத்தியர்கள் வெளியிலேயும் பிராக்டிஸ் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சலுகை அதிகமாக இருக்கிறது. அவர்கள் ஆஸ்பத்திரி மருந்துகளை வெளியே கொண்டுபோய் விடுகிறார்கள். இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்குமா?

28th February 1969]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதைப் பரிசீலிக்கிற நேரத்தில் திறமையான மருத்துவர்களை இழந்துவிட நேரிடுமோ என்று பார்க்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் இதை இன்னும் ஆராயவேண்டியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : சர்க்கார் மருத்துவ மனையில் இருக்கும் மருத்துவர்கள் காலை மாலை வேளைகளில் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே இருப்பதால் அவரிடம் வந்து பார்ப்பதற்கு வெளியே உள்ளவர்களுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அவர்களுடைய திறமையையும் உழைப்பையும் நாம் இழக்கக் கூடாது. தடை செய்தால் அதை இழப்போம் என்பதை அரசாங்கம் அறியுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதைப்பற்றி பல்வேறு கருத்துக்கள் இருப்பதால், அரசாங்கம் முழுவதையும் பரிசீலனை செய்கிறது. பிறகு இதைப்பற்றி விவரம் அறிவிக்கும்.

Teachers serving in Aided High Schools

*70 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of teachers serving in Aided High Schools in the Ramanathapuram Central Educational District who have not got their salaries refixed as per Memorandum No. 84856/E3/65-2, Education, dated 8th November 1965 taking their past service in Elementary Schools into account with effect from the date of the order; and

(*b*) the reasons therefor?

மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள்

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்) : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் கல்வி மாவட்டத்தில் மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் எத்தனை பேருக்கு, அவர்கள் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரிந்த காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு கல்வித்துறையில் 8—11—1965 தேதியிட்ட 84856-இ 3/65-2-ஆம் எண் குறிப்பாணையின் படி, அந்தக் குறிப்பாணையின் தேதியிலிருந்து சம்பளம் திருத்தியமைக்கப்படவில்லை?

(இ) அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :

(அ) ஒன்றுமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.